## வாக்குமூலம்

## நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு

## வழக்கு எண்.சி.சி.எண்.537/2019

## வழக்கு சாட்சி.அ.சா.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | தர்மன் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | சின்னகண்ணன் | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுக்கா | : | | வயது | : |

(வழக்கின் எதிரிகள் ஆஜர்).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.01.2025**

முதல் விசாரணை

நான் தற்போது கனிராவுத்தர் குளத்தில் குடியிருந்து கொண்டு, டெய்லராக வேலை செய்து வருகிறேன்.

சுமார் 3 வருடங்களுக்கு முன்பு காலை 10.00 மணிக்கு மதுரைவீரன் கோவில் அருகே போலீசார் என்னை அழைத்து கையொப்பம் கேட்டார்கள். நானும், எனது நண்பரும் கையொப்பம் செய்துக் கொடுத்தோம். எதற்காக என்று விசாரித்து, தெரிந்து கொள்ளவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ**.**சா**.**ஆ**.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு, அனுமதிக்கப் பட்டதன் பேரில், அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 07.08.2018-ம் தேதி காலை 09.45 மணிக்கு நீங்களும், தினேஷ் என்பவரும் காந்திநகர், மதுரைவீரன் கோவில் அருகே சென்றபோது, Food Cell காவல் உதவி ஆய்வாளர் முந்தைய நாள் 06.08.2018-ம் தேதி 17.30 மணிக்கு வேன்களில் ரேசன் அரிசி மூட்டைகளை ஏற்றிக் கொண்டிருந்த 3 நபர்களை கைது செய்துள்ளதாகவும், அந்த இடத்தில் போலீசார் பார்வையிட்டு, மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும், நீங்களும், தினேஷ் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தீர்கள் என்றும், போலீசார் விசாரணையின் போது கூறிவிட்டு, தற்போது உண்மையை மறைத்து, பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால், சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.537/2019**

**வழக்கு சாட்சி.அ.சா.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தினேஷ்குமார் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | பழனிச்சாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் எதிரிகள் ஆஜர்).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.01.2025**

முதல் விசாரணை

நான் தற்போது திண்டலில் குடியிருந்து கொண்டு, கார் ஷோரும் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன்.

சுமார் 6 வருடங்களுக்கு முன்பு காலை நேரத்தில் நானும், தர்மா என்பவரும் குளத்து வழியாக மதுரைவீரன் கோவில் அருகே சென்று கொண்டிருந்தோம். அங்கு கூட்டமாக இருந்தது. நின்று பார்த்துக் கொண்டிருந்தோம். போலீசார் எங்களை அழைத்து கையொப்பம் கேட்டார்கள். நானும், தர்மா என்பவரும் கையொப்பம் செய்துக் கொடுத்தோம். எதற்காக என்று விசாரித்து, தெரிந்து கொள்ளவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ**.**சா**.**ஆ**.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு, அனுமதிக்கப் பட்டதன் பேரில், அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 07.08.2018-ம் தேதி காலை 09.45 மணிக்கு நீங்களும், தர்மா என்பவரும் காந்திநகர், மதுரைவீரன் கோவில் அருகே சென்றபோது, Food Cell காவல் உதவி ஆய்வாளர் முந்தைய நாள் 06.08.2018-ம் தேதி 17.30 மணிக்கு வேன்களில் ரேசன் அரிசி மூட்டைகளை ஏற்றிக் கொண்டிருந்த 3 நபர்களை கைது செய்துள்ளதாகவும், அந்த இடத்தில் போலீசார் பார்வையிட்டு, மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும், நீங்களும், தர்மா என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தீர்கள் என்றும், போலீசார் விசாரணையின் போது கூறிவிட்டு, தற்போது உண்மையை மறைத்து, பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால், சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.